செய்தி வெளியீடு எண் : 1631 நாள் : 18.09.2022

செய்தி வெளியீடு

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி இன்று (18.09.2022) தமிழகம் முழுவதும் நடைபெற்ற 37ஆவது சிறப்பு மெகா கோவிட்– 19 தடுப்பூசி முகாமில் 8.17 இலட்சம் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டது மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தகவல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி தமிழ்நாட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகள் மற்றும் முக்கிய இடங்களில் என மொத்தம் 50,000 சிறப்பு மெகா கோவிட் தடுப்பூசி முகாம்கள் நடைபெற்றது.

இதுவரை நடைபெற்ற 36 மெகா கோவிட் தடுப்பூசி முகாம்களில் 5 கோடியே 35 இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளார்கள்.

இதுவரை (18–09–2022) 12–14 வயதுடைய **19,86,409 (93.65%)** பயனாளிகளுக்கு முதல் தவணை மற்றும் **15,66,176 (73.84%)** பயனாளிகளுக்கு இரண்டாம் தவணை தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 15–17 வயதுடைய **30,53,610 (91.26%)** பயனாளிகளுக்கு முதல் தவணை மற்றும் **25,95,960 (77.58%)** பயனாளிகளுக்கு இரண்டாம் தவணை வழங்கப்பட்டுள்ளது மற்றும் முன்னெச்சரிக்கை தவணை தடுப்பூசியாக மொத்தம் **86,06,640 (20.20%)** பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இன்று (18–09–2022) நடைபெற்ற சிறப்பு மெகா கோவிட் தடுப்பூசி முகாமில் 12 வயதிற்கு மேற்பட்ட **8,17,276** பயனாளிகளுக்கு கோவிட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது. இதில் முதல் தவணையாக **28,285** பயனாளிகளுக்கும் இரண்டாவது தவணையாக **1,83,073** பயனாளிகளுக்கும் மற்றும் **6,05,918** பயனாளிகளுக்கு முன்னெச்சரிக்கை தவணை கோவிட் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இதுவரை 18 வயதிற்கு மேற்பட்டோரில் **96.54%** முதல் தவணையாகவும் **91.37%** இரண்டாம் தவணையாகவும் கோவிட் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு 133க்குட்பட்ட தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகம், உஸ்மான் ரோடு, தி.நகர் பேருந்து நிலையம் அருகில், அமைக்கப்பட்ட சிறப்பு மெகா கோவிட் தடுப்பூசி முகாமினை தொடங்கி வைத்து கூறுகையில் வரும் 25–09–2022 அன்று 38வது சிறப்பு மெகா கோவிட் தடுப்பூசி முகாம் நடைபெறும் எனத் தெரிவித்தார்கள்.

தற்போது, தமிழ்நாட்டில் உள்ள 8,713 துணை சுகாதார நிலையங்கள், 2,286 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், 292 அரசு மருத்துவமனைகள் மற்றும் 42 அரசு

மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் ஆகிய 11,333 மையங்களில் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு 11 வகையான தடுப்பூசிகள் (13 ஆன்டிஜென்) பிரதி வாரம் புதன்கிழமை தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசின் அறிவிப்பின் படி 18–59 வயதுடையவர்களுக்கு கோவிட் தடுப்பூசி முன்னெச்சரிக்கை தவணை இலவசமாக வழங்குவது செப்டம்பர் 30ம் தேதியுடன் முடிவடைவதால், வரும் அக்டோபர் 1ம் தேதி முதல் மேற்கூறிய 11,333 மையங்களில் பிரதி வாரம் புதன்கிழமை தோறும் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு வழங்கப்படும் தடுப்பூசிகளுடன் இணைந்து கோவிட் தடுப்பூசி தவணைகளும் பொது மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் என தெரிவித்தார்.

மேலும், 12–17 வயதுடைய மாணவர்களில் இரண்டாம் தவணை பெற வேண்டியவர்களுக்கு அந்தந்த பள்ளிகளிலேயே பிரதி வாரம் வியாழக்கிழமை அன்று சிறப்பு முகாமினை அமைத்து கோவிட் தடுப்பூசி தவணைகள் வழங்கப்படும் என தெரிவித்தார்.

இதுவரை சுமார் 1044 நபர்களுக்கு இன்புளுயன்ஸா காய்ச்சல் கண்டறியப்பட்டதில், தற்போது 364 நபர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், காய்ச்சல் அறிகுறியுள்ள குழந்தைகளை பள்ளிகளுக்கு அனுப்பாமல் வீட்டிலேயே தனிமைப்படுத்தும் படியும் அறிவுரை வழங்கினார். பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட வேண்டிய சூழ்நிலை தற்போது இல்லை என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜெ.கருணாநிதி அவர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ப.செந்தில் குமார், இ.ஆ.ப., அவர்கள், நிலைக்குழு தலைவர்(பொது சுகாதாரம்) டாக்டர். கோ.சாந்தகுமாரி அவர்கள், மண்டலக்குழு தலைவர் திரு. எம்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள், நியமனக்குழு தலைவர் திரு. ராஜா அன்பழகன் அவர்கள், துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு. சங்கர்லால் குமாவாத், இ.ஆ.ப., அவர்கள், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துதுறை இயக்குநர் டாக்டர்.செல்வ விநாயகம் அவர்கள், இணை இயக்குநர் (தடுப்பூசி), மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகர நல அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் மாநிலத்தில் இன்று (18.09.2022) நடைபெற்ற சிறப்பு மெகா கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாமினை முன்னிட்டு நாளை (19.09.2022) கோவிட் தடுப்பூசி பணிகள் நடைபெறாது என தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in